# அறிவிக்கை

## கூட்டுறவுத்துறை

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

### தலைவர்/கூட்டுறவுச் சங்கங்களின் மண்டலஇணைப்பதிவாளர்
### மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

----

**விளம்பரம் எண்: 01/2024 நாள்: 09.10.2024**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளர்கள் (**Salesman**) பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து http://www.drbtry.in என்ற இணையதளம் வழியாக <u>Online மூலம் மட்டுமே</u> 07/11/2024 அன்று பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எ | நேரடி நியமன பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1) தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2) ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | திருவள்ளுவர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | முத்தரசநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | விநாயகமூர்த்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சோமரசம்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | உய்யக்கொண்டான்திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | துவாக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | வாளவந்தான்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | முத்தபுடையான்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஆளிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | மறவனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | வெள்ளைப்பூலான்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | மலையடிபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | புத்தாநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | மொண்டிபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | காவல்காரன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | புதுப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஆலத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பாலக்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | துவரங்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | 348 கவண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வையம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குமாரவாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | புறத்தாகுடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கருங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சின்ன அணைக்கரைப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அமையபுரம்குளத்தூரான்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | என்.கவண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை (சிந்தாமணி) | 3 |
| | | | திருச்சிப்பள்ளி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | 1 |
| | | | திருவானைக்கோவில் கூட்டுறவு பண்டக சாலை | 2 |
| | | | தென்சென்னை மின்நிறுவன ஊழியர்கள் கூட்டுறவு பண்டக சாலை | 6 |
| | | | முசிறி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வெள்ளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | மண்பறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | திருத்தியமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | தும்பலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அஞ்சலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வளையெடுப்பு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஏலூர்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அலகரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | காட்டுப்புத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 4 |
| | | | மைக்கேல்நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சிங்களாந்தபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கண்ணனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வீரமச்சான்பட்டி கலிங்கமுடையான்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | செங்காட்டுப்பாட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வெங்கடேசபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | எரகுடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பச்சப்பெருமாள்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | உப்பிலியபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | கொப்பம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | தளுகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | சோபனபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வைரிசெட்டிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கோட்டப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | பச்சமலை மலைவாழ்மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வாளாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | நகர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அன்பில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பெருவளநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பெருவளப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | புள்ளம்பாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | காணக்கிளியநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | விரகாலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அழுந்தலைப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | குமுளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | எதுமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | திருப்பைஞ்சீலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பனமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | **மொத்தம்** | **96** |
| 2 | நியாய விலைக்கடை கட்டுநர் (Packer) | 1) தொகுப்பு ஊதியம் ரூ. 5500/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2) ஓராண்டுக்குப் பிறகு ஊதியவிகிதம் ரூ. 7800-26000 | மேலகல்கண்டார்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 4 |
| | | | அரியமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | திருவெறும்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | துவரங்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை (சிந்தாமணி) | 11 |
| | | | தமிழ்நாடு அரசாங்க அலுவலர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 2 |
| | | | திருச்சிராப்பள்ளி மாவட்ட அமராவதி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை | 10 |
| | | | **மொத்தம்** | **33** |

குறிப்பு : மதிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் (Estimated Vacancy) எண்ணிக்கை தற்காலிகமானது (Tentative) மற்றும் மாற்றத்திற்கு உட்பட்டது.

## 1. நிபந்தனைகள் :-

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின்போது அரசுப் பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொது GT | பிற்படுத்தப் பட்டோர் BC | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) BC(M) | மிகவும் பிற்படுத்த பட்டோர் / சீர்மரபினர் MBC/DNC | ஆதி திராவிடர் SC | ஆதி திராவிடர் அருந்ததியர் SC(A) | பழங்குடி யினர் ST |
| 1. விற்பனை யாளர் | 96 | 29 | 25 | 4 | 19 | 15 | 3 | 1 |
| 2. கட்டுநர் | 33 | 10 | 9 | 1 | 7 | 5 | 1 | 0 |

2. இத்தெரிவுக்கு நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு மற்றும் இனச் சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.
3. அரசாணை (நிலை) எண்.122, மனிதவள மேலாண்மைத் (கே2) துறை நாள் 02.11.2021-ன்படி முன்னுரிமை பின்பற்றப்படும்.

4. மேற்குறிப்பிட்ட காலிப்பணியிடங்களில் பெண்கள், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், தமிழ் வழியில் பயின்றோர், மாற்றுத் திறனாளிகள் போன்ற இனங்களின் கீழ் வரும் காலிப் பணியிடங்களுக்கான இட ஒதுக்கீடு விதிகள் நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி பின்பற்றப்படும்.

5. மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு சங்கங்களின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

6. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

7. தேர்வில் கலந்து கொள்ளும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரங்கள் தேர்வு நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்படும்.

**முக்கிய நாட்களும் நேரமும்**

| | | |
|---|---|---|
| 1. | நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் | 07.11.2024<br>பிற்பகல் 5.45 மணி வரை |
| 2. | நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | நேர்முக தேர்வு நுழைவுச்சீட்டில் உள்ளபடி |

8. **தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் தெரிவு முற்றிலும் தற்காலிகமானதே.**

9. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் உரிய காரணங்களுடன் மேல் முறையீடு செய்யப்பட வேண்டும். அதற்குப் பின்னர் பெறப்படும் மேல்முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

## 2. உடற்தகுதி சான்றிதழ் :-

தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

## 3. தகுதிகள் :-

### அ. வயது (01.07.2024 அன்றுள்ளவாறு)

1. விண்ணப்பதாரர்கள் 01.07.2024-அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| i) | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் இவ்வகுப்புகளைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள். | வயது வரம்பு இல்லை |
| ii) | இதர வகுப்பினர் (OC) | 32 வயது |
| iii) | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| iv) | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | 50 வயது |
| v) | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | 42 வயது |

குறிப்பு

**1. விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்த பிரிவை சார்ந்தவர்களாக இருப்பினும் இதர வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்**

**2. ஆதரவற்ற விதவை விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி/ சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாக கருதப்பட மாட்டார். மறு மணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.**

## ஆ. கல்வித் தகுதிகள் :-

| | | |
|---|---|---|
| 1. | விற்பனையாளர் | மேல்நிலை வகுப்பு (+2 தேர்ச்சி) (அல்லது) அதற்கு இணையான கல்வி தகுதி தேர்ச்சி |
| 2. | கட்டுநர் | பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி (பத்தாம் வகுப்பு தேர்ச்சி) |

## 4. தமிழ் மொழித் திறன் :-

விண்ணப்பதாரர் இந்த அறிவிப்பு வெளியிடும் நாளன்று தமிழ் மொழியில் பேசவும், எழுதப் படிக்க போதுமான திறன் பெற்றவராக இருக்க வேண்டும்.

## 5. தெரிவு முறை :-

அ) விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதியில் பெற்ற மதிப்பெண்களுக்கு அளித்த மதிப்பு மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பெண்கள் அடிப்படையிலும், விண்ணப்பதாரர் சார்ந்துள்ள வகுப்பு வாரியான இன சுழற்சி அடிப்படையிலும், தொடர்புடைய இதர அரசாணைகள் மற்றும் சட்டப் பிரிவுகளின் கீழ் வரும் முன்னுரிமைகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்பட்ட பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்படும்.

ஆ) விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்குக் கட்டாயமாக நேரில் வருகை புரியவேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். இதுதொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத் தேர்விற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து உரிமை கோர இயலாது.

இ) விண்ணப்பதாரர்களை சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் போது அதிக மொத்த மதிப்பெண் பெற்றவர்கள் இனச்சுழற்சியைப் பின்பற்றி அவர்கள் விருப்பம் தெரிவித்திருந்த சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுவர். குறைவான மதிப்பெண் பெற்றவர்களுக்கு இனச்சுழற்சி அடிப்படையில் அவர்கள் விரும்பிய சங்கத்திற்கு ஒதுக்கீடு கிடைக்காமல் போகலாம். அத்தகைய நேர்வில் அந்தச் சமயத்தில் அவர்களது இனச்சுழற்சிக்கு எந்தச் சங்கத்தில் காலிப் பணியிடம் இருக்கிறதோ அந்தச் சங்கத்திற்கு அவர் ஒதுக்கீடு செய்யப்படுவார்.

ஈ) விண்ணப்பதாரர்களின் தகுதி குறித்த அனைத்துச் சான்றிதழ்களையும், ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகிய பிரிவுகளில் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் அனைத்துச் சான்றிதழ்களையும் சரி பார்த்த பின்னரே தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு பணி ஒதுக்கீடு ஆணை வழங்கப்படும்.

உ) மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் சங்கத்திற்கு ஒதுக்கீடு ஆணை (Selection and allotment order) மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். அவர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட சங்கத்தின் தகைமை வாய்ந்த அலுவலரால் பணியமர்வு ஆணை (Appointment order) வழங்கப்படும்.

ஊ)முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு முறை பொருந்தாது.

## 6. காலிப் பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல் :-

**விண்ணப்பதாரர்கள், தாங்கள் எந்த நிறுவனத்தின் நியாய விலைக் கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை நேர்முகத் தேர்வின்போது தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் ஒரு முறை விருப்பம் அளித்த பிறகு விருப்பத்தினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது. இதற்காக தனியாக கலந்தாய்வு (Counselling) ஏதும் நடைபெறாது.**

## 7. விண்ணப்பிக்கும் முறை :-

அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பம் http://www.drbtry.in **என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.** நேரிலோ அல்லது தபாலிலோ விண்ணப்பங்கள் பெறப்பட மாட்டாது.

**விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்துகொள்ள வேண்டும்.**

அ) விண்ணப்பப் படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பப் படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1. | **விண்ணப்பதாரரின் புகைப்படம் -50 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)** |
| 2. | **விண்ணப்பதாரரின் கையெழுத்து - 50 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)** |
| 3. | **விண்ணப்பதாரரின் சாதிச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)** |
| 4. | நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கான சான்றிதழ்– 200 kb **அளவுக்கு மிகாமல் (pdf file)** |
| 5. | தமிழ் மொழியில் படித்தவர் எனில், தமிழ் மொழியில் பயின்றதற்கான சான்றிதழ் -200 kb **அளவுக்கு மிகாமல் (pdf file)** |
| 6. | குடும்ப அட்டை – 200 kb **அளவுக்கு மிகாமல் (pdf file)**<br>**(அல்லது)**<br>**வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (pdf file)** |
| 7. | **மாற்றுத் திறனாளி எனில் அதற்கான சான்றிதழ்** – 200 kb **அளவுக்கு மிகாமல் (pdf file)** |
| 8. | **ஆதரவற்ற விதவை எனில் அதற்கான சான்றிதழ்** – 200 kb **அளவுக்கு மிகாமல் (pdf file)** |

| | |
|---|---|
| 9. | முன்னாள் இராணுவத்தினர் எனில் அதற்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |

விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும்போது, விண்ணப்பதாரர் தவறான தகவல்களை அளித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறானவை என்று பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவ்விண்ணப்பதாரர் தேர்விலிருந்து நிராகரிக்கப்படுவதுடன், மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் இனிவருங் காலங்களில் நடத்தப்படும் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க தகுதி அற்றவராக அறிவிக்கப்படுவார்.

## 8. விண்ணப்பக் கட்டணம் :-

அ) விற்பனையாளர் விண்ணப்பக் கட்டணம் ரூ.150/- மற்றும் கட்டுநர் (Packers) விண்ணப்பக் கட்டணம் ரூ.100/- ஆகும்.

ஆ) ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள், மூன்றாம் பாலினத்தவர்கள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

இ) விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் சமூக நலத்துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும் மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும்.

ஈ) முன்னாள் இராணுவத்தினரைப் பொறுத்தவரை முதல் இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

உ) விண்ணப்பக் கட்டணத்தை Online மூலம் மட்டுமே செலுத்த வேண்டும். இணையவழி கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

ஊ) கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றி அமைக்கும் உரிமை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

எ) ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி தரப்படமாட்டாது.

## 9. நேர்முகத் தேர்வு :-

அ) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்ட தலைநகரில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும். நேர்முகத் தேர்விற்கு அழைப்புக்

கடிதம் பெற்ற விண்ணப்பதாரர்கள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் தங்கள் சொந்த செலவில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

ஆ) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படவுள்ள நபர்களின் பெயர்ப்பட்டியல் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

இ) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (E-Mail) / குறுஞ்செய்தி (SMS) மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விவரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதங்களை, விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஈ) நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியில் பெற்ற மதிப்பெண்களின் மதிப்பு (weightage for academic marks) மற்றும் நேர்முகத் தேர்வில் அளிக்கப்பட்ட சராசரி மதிப்பெண்கள் முறையே 50 : 50 என்ற விகிதத்தில் இருக்கும்.

(<u>முக்கிய குறிப்பு</u> :-

**2020-2021-ஆம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பில் மதிப்பெண் குறிப்பிடப்படாமல் ஒவ்வொரு பாடத்திற்கும் எதிராக மதிப்பெண் குறிப்பிடாமல் வெறும் PASS என்று குறிப்பிட்டு வழங்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழை கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் தாங்கள் படித்த பள்ளியில் 9-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழினை அந்தத் தலைமை ஆசிரியரின் சான்றொப்பம் பெற்று (மொத்த மதிப்பெண்கள், பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றை குறிப்பிட்டு) அதனை, 10-ஆம் வகுப்பு PASS என்று வழங்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழுடன் பதிவேற்றம் செய்ய வேண்டும். இத்தகைய நேர்வுகளில் 9-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழினையும் இணைக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும். இத்தகைய நேர்வுகளில் 10-ஆம் வகுப்புக்கு பதிலாக விண்ணப்பதாரர்களின் 9-ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே உரிய மதிப்பு வழங்கப்படும்.**

உ) நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும், கோர இயலாது. நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

## 10. தடையில்லா சான்றிதழ் :-

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக இருக்கும்பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

## 11. இதர நிபந்தனைகள் :-

அ) நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் இரத்து செய்யப்படும்.

ஆ) நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

இ) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

ஈ) விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பாக இணையதளத்தில் உள்ள "**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை (Instructions to the candidates)**" பகுதியை கவனமாகப் படித்து தெரிவு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உ) விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி நிறுத்தப்படும்.

ஊ) விண்ணப்பிக்கும் முறை குறித்து எழும் சந்தேகங்களுக்கு விண்ணப்பதாரர்கள் drpdstrichy2021@gmail.com என்ற இ-மெயில் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் மின்னஞ்சல் முகவரியில் அலுவலக வேலை நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

உதவி மையம் தொடர்பு தொலைபேசி எண்: 0431-2424170

எ) விண்ணப்பதாரர்கள் தெரிவுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பத்தைப் பதிவேற்றம் செய்வதில் தாமதமோ அல்லது தொழில் நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது

மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சினை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சினை ஏற்பட்ட 3 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது.

ஆன்லைன் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 07.11.2024 நேரம் மாலை 05.45 மணி.

இணைப்பதிவாளர் / தலைவர்,
திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்.